பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 06 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜி-7 உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று பிற்பகல் பிரான்சின் **Evian** சென்றடைந்தார்.
2. எல்-நினோ வெப்ப தாக்கத்தால், பருவமழை குறையும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று ஆய்வு செய்தார்.
3. மருத்துவர்களின் பரிந்துரை சீட்டு இருந்தால் மட்டுமே, மருந்துக்கடைகளில் இருமல் மருந்து விற்பனை செய்யப்படும் என மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.
4. சீனாவில் இன்று தொடங்கியுள்ள உலக சுகாதார அமைப்பின் மூலிகை மருத்துவ நிபுணர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்றுள்ளது.
5. லெபனானில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வெளியேறினால் மட்டுமே அமெரிக்காவுடனான சண்டை நிறுத்தம் முழுமை பெறும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜி-7 உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று பிற்பகல் பிரான்சின் **Evian** நகர் சென்றடைந்தார்.

சுவிட்சர்லாந்து வழியாக **Evian** சென்றபோது, சுவிஸ் அதிபர் திரு **Guy Parmelin** விமான நிலையத்தில் சந்தித்து பேசினார்.

இரு தலைவர்களும், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து உரையாடினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தொடர்ந்து ஏழாவது முறையாக ஜி-7 உச்சிமாநாட்டில் கலந்துகொள்கிறார்.

உலகளாவிய முக்கிய சவால்களுக்கு தீர்வுகாண்பதில் இந்தியாவின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்து ஜி-7 மாநாடுகளில் இந்தியா பங்கேற்று வருகிறது.

அமைதி, பாதுகாப்பு மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் இந்தியா உலக நாடுகளுடன் இணைந்து சிறப்பான பங்களிப்பை செலுத்தி வருகிறது.

ஜி-7 உச்சிமாநாட்டில் **Global South** என்று அழைக்கப்படும் வளர்ந்து வரும் நாடுகளின் பிரச்சினைகளை பிரதமர் முன்வைக்க உள்ளார்.

இன்று மாலை பிரான்ஸ் அதிபர் திரு இமானுவெல் மெக்ரான் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் கலந்துகொள்கிறார்.

ஜி-7 உச்சிமாநாட்டையொட்டி நடைபெறும் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்திலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

இந்த உச்சிமாநாட்டையொட்டி, கனடா பிரதமர் திரு மார்க் கார்னி, பிரிட்டன் பிரதமர் திரு **Keir Starmer**, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் திரு ஷேக் முகமது பின் சயீத் உள்ளிட்ட தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேச உள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்பை, பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை சந்தித்து பேசுகிறார்.

இந்தியா — அமெரிக்க நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பிரதமர் அவரிடம் பேச்சு நடத்த உள்ளார்.

மேலும், உலகளாவிய முக்கிய பிரச்சினைகள் குறித்தும் இரு தலைவர்களும் பேச உள்ளனர்.

<<<<<<>>>>>>

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு துறைகளிலும் கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டதன் மூலம், வளர்ச்சியடைந்த இந்தியாவை

உருவாக்க வலுவான அடித்தளமிட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் விஜயவாடா அருகே ரயில் நிலைய மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரயில்வே மின்மயமாக்கல் பணிகள் விரைவில் 100 சதவீதத்தை எட்டும் என்று கூறினார்.

டீசலுக்காக வெளிநாடுகளை சார்ந்திருப்பதை குறைத்து, நீடித்த கட்டமைப்பு வளர்ச்சிகளை மத்திய அரசு ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சூரியசக்தி மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதையும் திரு திரு பிரல்ஹாத் ஜோஷி சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

UPI மின்னணு பணப்பரிவர்த்தனை கட்டமைப்பை மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் இன்று பிரான்சின் Nice Massena -வில் தொடங்கிவைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலகத் தரத்திலான மின்னணு பணப்பரிவர்த்தனை கட்டமைப்பு

பிரான்ஸ் நாட்டில் தொடங்கப்பட்டிருப்பது அதன் உலகளாவிய விரிவாக்கத்தை உறுதி செய்வதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நம்பிக்கை மிகுந்த பணப்பரிவர்த்தனை கட்டமைப்பை, உலகின் பல்வேறு பகுதிகளிலும் பயன்படுத்துவதால், நாட்டின் பொருளாதார தொழில்நுட்ப தொடர்புகள் வலுப்பெறும் என்று திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

எல்-நினோ வெப்ப தாக்கத்தால், மழை அளவு குறையும் மாவட்டங்களில் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பது, பருப்பு வகைகள் உற்பத்தியில் சுயசார்பை எட்டுவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

பருவமழை குறைவாக பெய்யும் இடங்களில் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கான வழிவகைகள் குறித்தும் அவர் புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

எல்-நினோ பாதிப்பிலிருந்து விவசாயத்தை பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அவர் ஆய்வு செய்தார்.

பருவம் தவறி அல்லது குறைந்த அளவு மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படும் இடங்களில் முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

மாநில அரசுகளுடன் இணைந்து, பயிர் வாரியான சாகுபடி திட்டங்களை விவாதிப்பது என்றும், விவசாயிகளுக்கு தேவையான மாற்று ஏற்பாடுகளை செய்து தருவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மழை நீரை பாதுகாத்து ஈரப்பதத்தை தக்க வைப்பதற்கான வழிமுறைகள் குறித்தும், மாற்றுப்பயிர் சாகுபடி குறித்தும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தமது அமைச்சக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

கிராமப் புறங்களிலும் இனி, உரிமம் பெற்ற மருந்துக் கடைகளில் மருத்துவர்களின் பரிந்துரை சீட்டுடன் வருவோருக்கு மட்டுமே இருமல் மருந்து விற்பனை செய்யப்படும் என மத்திய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மருந்துப் பொருட்களுக்கான 1945-ம் ஆண்டின் விதிமுறைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டுள்ளது.

இதன்படி, கிராமப்புறங்களிலும் இனி மருத்துவர்களின் பரிந்துரை சீட்டுடன் உரிமம் பெற்ற மருந்துக் கடைகளில் மட்டுமே இருமல் மருந்து விற்பனை செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்களில், உரிமம்பெற்ற மருந்துக் கடைகள் இல்லாவிட்டாலும், அங்கு இருமல் மருந்து விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது இந்த சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சீனாவில் இன்று தொடங்கிய உலக சுகாதார அமைப்பின் மூலிகை மருத்துவ நிபுணர்கள் மாநாட்டில் இந்தியா பங்கேற்றுள்ளது.

ஆயுஷ் அமைச்சகத்தை சேர்ந்த மூலிகை மருத்துவ நிபுணர்கள் இம்மாநாட்டில் இந்தியாவில் உள்ள மூலிகை மருத்துவ முறைகள் குறித்து செயல் விளக்கங்களை நிகழ்த்த உள்ளனர்.

**Pharmacopoeia** அமைப்பின் இயக்குநர் டாக்டர் ராமன் மோகன் சிங், இந்திய இயற்கை மருந்துகள் குறித்து விளக்கம் அளிக்க உள்ளார்.

நாட்டின் பாரம்பரிய மூலிகை மருத்துவ முறைகளுக்கு உலகளாவிய அங்கீகாரம் அளிக்கும் வகையில் ஆயுஷ் அமைச்சகம் இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆதார் அட்டையை முறைகேடாக பயன்படுத்துவது குறித்து பதிலளிக்குமாறு, மத்திய — மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குடியுரிமை, வசிப்பிடம் மற்றும் வீட்டு முகவரிக்கான ஆவணமாக, ஆதார் பயன்படுத்தப்படுவதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி திரு.சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஆதார் அட்டையை தனிநபர் அடையாள ஆவணமாக மட்டுமே பயன்படுத்த உத்தரவிடுமாறும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றத்திற்கான பாலமாக செய்தியாளர்கள் திகழ்வதாக தமிழகத்தின் சேலம் மாவட்ட ஆட்சியர் திரு இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில் சேலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிலரங்கை அவர் தொடங்கிவைத்து பேசினார்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகங்கள் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயக ரீதியான ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள், நிர்வாகத்தின் செயல்பாட்டையும், வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குநர் திரு பழனிசாமி, நாட்டின் வளர்ச்சி குறித்த தகவல்களை ஊடகவியலாளர்கள் அதிக அளவில் மக்களிடம் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், பத்திரிகை தகவல் அலவலக இயக்குநர் திரு அருண்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

லெபனானில் உள்ள ராணுவ துருப்புகளை இஸ்ரேல் முழுமையாக விலக்கிக் கொண்டால்தான், ஈரான் — அமெரிக்க சண்டை நிறுத்தம் முழுமை பெறும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு **Abbas Araghchi** தெரிவித்துள்ளார்.

தெற்கு லெபனான் பகுதியை தொடர்ந்து இஸ்ரேல் ஆக்கிரமிப்பது, அமெரிக்க — ஈரான் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என்பது ஈரான் — அமெரிக்க சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளதா என்பதை அமெரிக்கா தெளிவுபடுத்தவில்லை.

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு, அமெரிக்க அதிபர், ஈரானுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தங்களை கட்டுப்படுத்தாது என்றும், லெபனான் தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்லோவேனியா உலக டேபிள் டென்னிஸ் தகுதி சுற்று போட்டியில் இந்தியாவின் **Syndrela Das, Sutirtha Mukherjee** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Syndrela Das 11-4, 10-12, 5-11, 13-11, 12-10** என்ற செட் கணக்கில் லக்சம்பர்கின் **Xia Lian Ni-** ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில், **Sutirtha Mukherjee 5-11, 11-5, 11-5, 11-9** என்ற செட் கணக்கில், **Hana Arapovic** -ஐ வென்றார்.

----------

பிரான்ஸ் சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Alphia James — Pallavi** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று தொடங்கிய இப்போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Prem Kumar — Abu Hubaida** இணையும், **Munna Khalid — Shashank Kumar** இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Shashank Kumar** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் நள்ளிரவு மணி **12.30-**க்கு நடைபெறும் ஆட்டத்தில் பிரான்ஸ் — **Senegal-**ஐ எதிர்கொள்கிறது.

நாளை அதிகாலை மணி **3.30-**க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஈராக் — நார்வேயுடன் மோதுகிறது.

<<<<<<END>>>>>>